ஒவ்வொரு ஞாயிறு
மாலை 5-15 மணிக்கு
ஒலிக்கிறது......
எஸ். எஸ். கணேசபிள்ளையின்
"அமுதசுரபி"
வானொலி நாடகம்
உங்கள் அபிமான நிறுவனம்
வழங்குகிறது.
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ பக்கங்கள் விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 ஐப்பசி 11 ஜுல்ஹஜ்: 25 இதழ்: 259
யாழ்ப்பாண சனிக்கிழமை 28-10-78

இலத்திரனிக்ஸின்
இணையற்ற நிறுவனம்
வழங்கும் வானொலி நிகழ்ச்சி
ஒவ்வொரு ஞாயிறும்
மாலை 5-15 மணிக்கு
எஸ். எஸ். கணேசபிள்ளையின்
"அமுதசுரபி"
கேட்டு மகிழுங்கள்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284-

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED 1978-10-31
PERIODICALS DIVISION
LIBRARY

# "காந்திஜி கொள்கையையே நான் பின்பற்றுகிறேன்"

புதுடில்லி வரவேற்பில் ஜே. ஆர்.

## 2-வது டெஸ்ட் இந்தியா--199 பாக். 28--1

லாகூர், அக் 27

இந்திய-பாக், 2-வது கிரிக்கெட் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் இந்தியா சகல விக்கெட்டுகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

'ரொஸ்ட்' போட்டதில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் காப்டன் முஷ்ராக் மொகமட் இந்தியாவைதுடுப்பெடுத்தாட அனுமதித்தார்,

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியர் 49 ஓட்டங்களுக்குள் சுமார் 40 நிமிடத்தில் முக்கிய நான்கு விக்கெட்டுகளை இழந்தது. [கவஸ்கார்-05,

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜெயவர்த்தனவின் சாதனைகளுக்கு இந்திய ஜனாதிபதி புகழ்மாலை

(புதுடில்லி)

இந்தியாவின் பெரும் தவப்புதல்வர் மகாத்மாகாந்தியின் கொள்கைகளையே தாம் பின்பற்றிவருவதாக இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன புதுடில்லியில் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசியல் ஞானம், ராஜதந்திரம், அரசியல் நிர்வாகத்திறன் ஆகிய சாதனைகள் பிரபல்யம்பெற்றவை என்று இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சிவிரெட்டி புதுடில்லி விமானநிலையத்தில் திரு. ஜெயவர்த்தனவை வரவேற்றுப் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு உத்தியோக ஆர் ஜெயவர்த்தனவை சிவரெட்டி வரவேற்றுப் பூர்வ விஜயத்தை மேற்கொண்டு பாலம் விமானநிலையத்தில் பேசுகையில் மேலும் கூறிய கொண்டு வந்த திரு. ஜே. இந்திய ஜனாதிபதி திரு. சஞ் தாவது,

அயல்நாடுகளுடன் நெருங்கிய உறவு கொள்வதே இந்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். மொரார்ஜி சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயும் நேற்று மாலை ராஷ்டிரபதிபவனில் சந்தித்து இருநாட்டு பொருளாதார, சமூக, கலாச்சார நல்லுறவுகள் குறித்து பேச்சு நடாத்தினர்.

(இ)

## ஜே. ஆருக்கு புதுடில்லியில் அமோக வரவேற்பு

சென்னையிலிருந்து விசேட இந்திய விமானப்படை விமானம் மூலம் புதுடில்லி பாலம் விமான நிலையத்தை பகல் 12-20-க்கு வந்தடைந்த ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்கும் அவரது பாரியாருக்கும் அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமானத்திலிருந்து இறங்கியதும் அவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் 21 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

## வவனியா விமானத்தளம்; நீதிமந்திரி திறந்தார்

### பொதுமக்களுக்கு அனுமதியில்லை; எம். பி.யும் சமுகமளிக்கவில்லை

[வவனியா]

வவனியா நகரிலிருந்து இரண்டு மைல் தொலைவில் அமைக்கப்பட்டுள்ள விமானத்தளத்தை நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் நேற்றுக்காலை திறந்து வைத்தார். இந்த வைபவத்துக்கு பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. அங்கு நின்ற சிலரும் அங்கிருந்து கலைக்கப்பட்டனர்.

இந்த வைபவத்தில் வவனியா எம் பி திரு. தா சிவசிதம்பரமும் கலந்துகொளளவில்லை.

விமானப்படையைச்சேர்ந்த இருபது சிப்பாய்கள இங்கிருந்து பாதுகாப்புப்படையில் ஈடுபடுவர். இவர்களுக்கு இராணுவமும் பொலிசும் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கும்.

விமானத்தளத்தைத் திறந்துவைத்தபின் மட்டக்களப்பிலிருந்து தமது பாரியாருடன் வந்த அதே விசேஷ விமானத்தில் நீதியமைச்சர் யாழ்ப்பாணத்துக்குப் பயணமானர்,

## நீதி அமைச்சர் யாழ். வந்து திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முற்பகல் உத்தியோகப்பற்றற்ற முறையில் விஜயம் செய்த நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் யாழ். கோட்டையிலுள்ள கிங்ஸ் ஹவுசில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலரையும் மற்றும் சில பிரமுகர்களையும் சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது,

இப் பேச்சுவார்த்தைகளில் யாழ்ப்பாணம், முல்லைத்திவு மாவட்ட அமைச்சர்கள் நியமனம் பற்றியும் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சரிடம் ஒரு மகஜரைக் கையளித்ததாகவும் இதைப்பெற்றுக் கொண்ட அமைச்சர் நாட்டின் ஐக்கியத்துக்கு உழைக்குமாறும் கட்சியைப் பலப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டதாக் கூறப்படுகிறது,

தமது பாரியாருடன் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய நீதி அமைச்சரை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு, லயனல் பெர்ணன்டோ, நீதிபதிகள், மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வரவேற்றனர்,

நீதி அமைச்சரும் பாரியாரும் பின்னர் காரைநகரிலுள்ள சீ-நோர் அபிவிருத்தித் திட்டத்துக்கும் சென்று பார்வையிட்டனர்,

மாலையில் நீதி அமைச்சரும் பாரியாரும் யாழ். நகரிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

[கெ]

## சதாத்துக்கு நோபல் பரிசு?

லண்டன், அக் 27

இந்த ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத்துக்குக் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தப் பரிசை ஜனாப் சதாத் இஸ்ரேல் அதிபர் திரு பெகினுடன் பகிர்ந்து கொள்வார் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. [இ]

## காந்திஜியின் உருவச்சிலை உடைக்கப்பட்டது

சென்னை, அக். 27

சேலம் நகரிலுள்ள மகாத்மாகாந்தியின் சிலையை இனந்தெரியாத நபர்கள் உடைத்துச் சேதப் படுத்தியுள்ளனர்.

சிலையின் அடியிலுள்ள பீடத்தில் சினத் தலைவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு அம்பாறை வரை அமோக வரவேற்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்துஇன்று மோட்டார்கார் பவனியில் பிரதமர் திரு ஆர் பிரேமதாசாவும் பாரியாரும் அம்பாறைக்கு வந்தபோது வழியெங்கும் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. கல்முனையிலும்,அட்டாளைச்சேனையிலும் பிரதமர் பொதுக்கூட்டங்களிலும்உரை நிகழ்த்தினர். வழியெங்கும் அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

பிரதமர் அம்பாறைபோய்ச் சேர்ந்ததும் அங்கும் எம் பிக்களும் பொதுமக்களும் மலர் மாலைகள் சூட்டி உற்சாகமாக

[8-ம் பக்கம் பார்க்க]

## கூட்டணி மத்திய செயற்குழு நாளை அவசரமாக கூடுகிறது

### இன்றைய அரசியல் பற்றி ஆராயும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுவின் விசேட கூட்டமொன்று நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

''இன்றைய அரசியல் நிலை பற்றி ஆராய்வதற்காகவே மத்தியசெயற்குழுவின் விசேட கூட்டம் நாளை நடைபெறுகிறதென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும் மாவட்ட அமைச்சர் பதவி பற்றிய கருத்து வேறுபாடுகளும் வவனியா எம் பி திரு. தா. சிவசிதம்பரம் விடுத்த பத்திரிகை அறிக்கை, மற்றும் கிழக்கு மாகாண எம் பிக்கள் சிலரின் அறிக்கைகள ஆகியவை கூட்டணிக்குள் ஏற்படுத்தியுள்ள ''அரசியல் நெருக்கடி'' பற்றி விவாதிப்பதற்காகவே நாளை மத்திய செயற்குழு அவசரமாகக் கூடுகிறதென்று கூட்டணி வட்டாரங்களில் கருதப்படுகிறது.

## வரி விளம்பரம்

### தேவை

பெண் கசியர் தேவை. சொந்தக் கையெழுத்தில் உடன் விண்ணப்பிக்கவும். ஆர். எஸ். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0683

### கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம் (Emma & Mc Beth) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0592, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 0592

### விற்பனைக்கு

"வெஸ்பா" ஸ்கூட்டர்; மிகநல்ல நிலையிலுள்ள 3 ஸ்ரீ வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க லக்ஷ்மிபவான், பஸ் நிலையம், பருத்தித்துறை. 0687


## கடதாசி ஆலையில் பனை வளம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனம் வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை வளவில் நாட்டுவதற்காக பத்தாயிரம் பனம் விதைகளை மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசாவிடம் கேட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்காக திரு கனகராசா பனம் விதைகளைச் சேகரித்து வருகிறார்.

வேறு பல ஸ்தாபனங்களும் பனம் விதைகளைக் கேட்டுள்ளதால் அவற்றுக்கு வழங்குவதற்குப் போதிய பனம் விதைகள் கிடைக்கவில்லை என்றும் திரு. கனகராசா தெரிவித்துள்ளார். )இ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற காரைநகர் கருங்காலியில் வதிந்த வேலுப்பிள்ளை இராமலிங்கம் என்பவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்து விடயமாக

மரணமெய்தியவர்.

இராமலிங்கம் கைம்பெண் சுந்தரம், உடையார் வளவு, கருங்காலி, காரைநகர். மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. T/3330

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி ஒப்பம்

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1978-ம் ஆண்டு — மாதம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

உண்மைப்பிரதி என உறுதிப்படுத்துகிறேன்.

ப. கதிரவேலு,
வழக்காளியின் சட்டத்தரணி.
20-10-78

காரணம்காட்டும் திகதி 21-12-78 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக்கட்டளைப்படி ஒப்பம்

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

0621

## பூநகரி கிராமாட்சி மன்றம் கேள்வி விளம்பரம்

பூநகரி கிராமாட்சி மன்ற நிர்வாகஸ்தரால் மேற்குறித்த பிரதேசத்திலுள்ள செட்டிய குறிச்சி கறுக்காய்தீவு வீதி, ஞானிமடம் கறுக்காய்தீவுவீதி ஆகிய இருவேலைகளுக்குகேள்விகள் அழைக்கப்படுகின்றன.

### நிபந்தனைகள்

1. கேள்வி வைப்புப் பணம் ரூபா 250/-
2. கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/-. இப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.
3. கேள்வி அனுப்பும் பத்திரத்தில் பூநகரி கிராமாட்சி மன்ற இலச்சனை பொறிக்கப்பட்டிருத்தல்வேண்டும்.
4. கேள்விப் பத்திரங்களை அலுவலக நேரங்களில் 6-11-78 திங்கட் கிழமை முற்பகல் 11-00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.
5. 7-11-78 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11-00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நிர்வாகஸ்தர், கிராமாட்சி மன்றம், பூநகரி, பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்ப்பாணம் ஆகியோருக்கு கேள்விகள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.
6. ஒப்பந்த வேலை செய்வதற்கு பூநகரி கிராமாட்சி மன்றத்தால் அல்லது மாநகரசபையால், அல்லது அரசாங்கத்தால் உத்தரவு பெற்றவர்கள் மாத்திரம் கேள்விகள் அனுப்பலாம்.
7. மேற்குறித்த வேலை 31-12-78க்கு முன்னர் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
8. நிர்வாகஸ்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் உடனடியாக ஐந்து (5) நாட்களுக்குள் குறித்த வேலையை ஆரம்பிப்பதற்குரிய அறிகுறிகளைக் காட்டவேண்டும்.
9. எட்டாவது நிபந்தனையில் கூறப்பட்டவாறு ஒப்பந்தகாரர்வேலையை ஆரம்பிக்கத் தவறின் குறித்த வேலை இரண்டாவது குறைந்த கேள்விக்காரருக்கு கொடுக்கப்படும்.
10. அலுவலக நேரங்களில் வேண்டிய விபரங்களை அறிந்து கொள்ளலாம்.
11. காரணம் காட்டாது எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ பூநகரி கிராமாட்சி மன்றநிர்வாகஸ்தருக்கு அதிகாரமுண்டு.

க. சி. வேல்முருகு,
நிர்வாகஸ்தர்.

கிராமாட்சி மன்றம்,
பூநகரி 26-10-78.

0688

## வடமராட்சியில் 18 தொன் விதைகிழங்கு விநியோகம்

(உடுப்பிட்டி)

வடமராட்சியில் உடுப்பிட்டி பருத்தித்துறை தொகுதிகளில் 18 தொன் விதை உருளைக்கிழங்கு இம்முறை விவசாயிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது.

பருத்தித்துறைத் தொகுதியை உள்ளடக்கிய அம்பன் கமநலச்சேவை நிலையத்திற்கு 8 தொன்னும் உடுப்பிட்டித் தொகுதியை உள்ளடக்கிய புலோலி கமநலச்சேவை நிலையத்திற்கு 10 தொன்னும் விதைஉருளைக்கிழங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்க்கா, மேர்க்கா, கினிக்கா போன்ற வெளிநாட்டு இனவிதை உருளைக் கிழங்குகளே வடமராட்சி விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுமென்றும் விதை உருளைக்கிழங்கு கோரி கிடைந்த விண்ணப்பங்களை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு எம். வேலும்மயிலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் ஆகியோர் தலைமையிலான சபையினால் பரிசிலனை செய்யப்பட்டு ஒவ்வொரு விவசாயிக்கும் ஒதுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பனைவளத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியில் பனை வளத்தை ஊக்குவிக்க பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

இப்பகுதி மக்கள் ஒவ்வொருவரும் ஐந்து பனம் விதைகளாவது நாட்டி, எமது வருங்காலச் சந்ததியினருக்கு நன்மையளிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சகலரையும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

## வேம்பராயில் பரிசோதனை திடீர் நிறுத்தம்

(மட்டுவில்)

வேம்பராய் வற்று ஊற்றுக் கிணற்றின் பரிசோதனை திடீரென நிறுத்தப்பட்டது. அதில் சுமார் ஒருஅடி ஆழத்தில் உவர் நீர் கலப்பு தென்பட்டதைத் தொடர்ந்தே இப்பரிசோதனை நிறுத்தப்பட்டது.

தேசிய நீர் விநியோக வடிகால் பகுதியினர் வேம்பராயிலுள்ள வற்று ஊற்று கிணற்றை பரிசோதனை நடத்தினர் சாவகச்சேரிதொகுதியில் குடிநீர் வசதியற்ற இடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்காகவே இந்த ஆய்வு நடைபெற்றது. ஆலனல் அதில் உவர் நீர்கப்பு தென்பட்டதைத் தொடர்ந்து பரிசோதனையை நிறுத்திக் கொண்டனர். மீண்டும் இப்பகுதியில் வேறுபல கிணறுகள் பரிசோதனை செய்யப்படவுள்ளன.

மேற்படி கிணறுகள் 1979 ஆகஸ்ட் மாதமே பரிசோதனை ஆரம்பிக்கப்படும்.

இப்பொழுது மாரிகாலம் ஆரம்பித்து விட்டதின் காரணமாகவே ஆகஸ்ட் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாம்.

## அருணோதயாவில் ஐ. நா. தினம்

(யாழ்ப்பாணம்)

'நாடுகளிடையே சமாதானம், சகல மக்களினதும் நல்வாழ்வு, மனித குலத்தின் சிறப்பும் மேம்பாடும் நிரம்பிய வாழ்வு ஆகிய உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கொள்கையை நாமெல்லாம் கடைப்பிடித்தால் எமது வாழ்வு மலரும். 1979ஆம் ஆண்டு சிறுவர் ஆண்டாக இருப்பதால் இன்று இக் கொண்டாட்டம் முக்கியத்துவம் உடையது. மாணவர்கள், சிறுவர் ஆண்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிப் பயனடையவேண்டும்.'

இவ்வாறு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தின விழாவில் சிறப்புரையாற்றிய யாழ். மாவட்ட சமூகவியல் ஆசிரிய ஆலோசகர் திரு. பொ. சிவசுப்பிரமணியம் கூறினார்.

ஐ. நா. தின விழாவை யொட்டி பாடசாலை மாணவரிடையே நடைபெற்ற பொது அறிவுப்போட்டியில் வகுப்புரீதியாக இடம்பெற்றவர்கட்கு அருணோதயா பெற்றோர்-ஆசிரியர் சங்கம் அன்பளித்த புத்தகப்பரிசில்களையும் திரு. பொ. சிவசுப்பிரமணியம் வழங்கினார். ஆசிரியர் செ. இராசரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

## பனம் விதை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

முரசுமோட்டை, தருமபுரம், விசுவமடு ஆகிய பகுதிகளில் இம்மாதம் 31-ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தாரால் பனம் விதை இலவசமாக விநியோகிக்கப்படவிருக்கிறது.


## தீபாவளி மலிவு விற்பனை

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்திற்கு அருகாமையில்

செயற்கைப் பட்டுச் சேலைகள்
வொயில் சேலைகள்
சூட்டிங் வகைகள்
சேட் வகைகள்
சிறுவர் உடைகள்

சிலவற்றில் 50% வரை விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

ம. யோசேப்பு,
பதில் பொதுமுகாமையாளர்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு. 0680

## விஞ்ஞான மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

யாழ் நகரில் இன்று 28-10-78 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படுகிறது

ஸ்ரான்லி சயன்ஸ் சென்ரர்

இந்நிறுவனத்தை யாழ்ப்பாணம் எம். பி.

திரு. வெ. யோகேஸ்வரன்

திறந்துவைப்பார்.

க. பொ. த. உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் மட்டும் பிரபலம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களால் போதனை அளிக்கப்படும்.

பெண்களுக்குத் தனியாகத் தட்டெழுத்து சுருக்கெழுத்து வகுப்புகள் உண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
பதிவாளர்,

ஸ்ரான்லி சயன்ஸ் சென்ரர்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

0672


## ஆலய விபரம் கோருகிறார் அரசாங்க அதிபர்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல மதங்களையும் சேர்ந்த ஆலயங்களைப் பற்றிய விபரங்களை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கிராம சேவையாளர்களிடமிருந்து கோரியுள்ளார்.


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## P. T. K. இரத்தினம் அன் கொம்பனி

யாழ்ப்பாணக்கிளையின்

ஜீவாணி எண்டர்பிறைஸ்

மங்களகரமான

திறப்புவிழா



இடம்: (367) 605-607 கே.கே.எஸ்.வீதி

காலம்: 28-10-78 (இன்று) சனி காலை 7-42 மணிக்கு பா. உ. வட்டுக்கோட்டை கௌரவ தா. திருநாவுக்கரசு அவர்களால் திறந்துவைக்கப்படும்.

விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்.

P. T. K. இரத்தினம் அன் கொம்பனி
37, டாம் வீதி, கொழும்பு. போன்: 33461

கிளை நிறுவனம்:
ஜீவாணி எண்டர்பிறைஸ்
கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

0689

# கால்நடைஉணவு விலைக் குறைப்பு

காால்நடைத் தீனியின் விலையும் கோழித்தீனியின் விலையும் குறைக்கப்படுகின்றன.

தேசிய பால்சபைக்கு பால் விநியோகிக்கும் பால உற பத்தியாளரும் சிறிய அளவு பாற்பண்ணையாளரும் ஒரு பைந்து பாலுக்கு முப்பது சதம் கூடுதலாகப் பெற விருக்கின்றனர்.

இந்தப் புதிய விலைமாற்றங்கள் அடுத்த புதன் கிழமை அதாவது நவம்பர் முதல் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகின்றன.

கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இப்புதிய விலை மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறார்.

கால்நடைத்தீன் கோழித்தீன் ஆகியவைகளின் விலைகள் ஒரு தொன்னுக்கு நாநூறு ரூபாயாகக் குறைக்கப்படுகிறது. விலைகள் குறைக்கப்படுவதால் அவற்றின் தரம் பாதிக்கப்படமாட்டாதென்றும் கால்நடை, கோழித்தீனைத் தயாரிக்கும் தனியார்துறையினரும் புதிய விலையின்படியே இவற்றைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டிருப்பதாகவும் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

பாற்பண்ணைகள் பலவற்றுக்கும் நேரில் சென்று பார்வையிட்டதுடன் இது பற்றி நன்கு ஆராய்ந்த பின் அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்.

கால்நடை உணவின் விலையும் கோழித்தீனியின் விலையும் அதிகரித்ததால் கால்நடைவளர்ப்பிலீடுபட்டவர்களும் கோழிப்பண்ணை அமைத்தவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் இத்துறைகளிலிருந்தே பலர் ஒதுங்கிக்கொண்டனர்.

பாலும் முட்டையும் குறைந்தவிலையில் தாராளமாகக் கிடைக்கக் கூடியதாக இருந்தால் போஷாக்கின்மையால் ஏற்படும் சாவைத்தடுத்துவிடலாம்.

கால்நடை உணவும் கோழித்தீனியின் விலையும் குறைக்கப்படுவதால், கால்நடைவளர்ப்பிலும் கோழி வளர்ப்பிலும் மக்கள் பலர் ஆர்வம் செலுத்துவர்என்று எதிர்பார்க்கலாம்.

இந்தியாவில் சிறந்த பசு வளர்ப்பவர்களுக்குப்பரிசும் பட்டமும் வழங்கப்படுவதுண்டு பசுவளர்ப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களும் உதவியும் ஊக்கமும அளிக்க வேண்டும். மேய்ச்சல் தரைகளும் ஒவ்வொரு பகுதியிலும் ஒதுக்கப்படவேண்டியதும் அவசியமாகும்.

பாற்பண்ணையாளரும் சிறிய அளவு பண்ணையாளரும் பசு வாங்குவதற்கு உதவியாக ஐயாயிரம் ரூபாய் வரை இலங்கை வங்கிமூலம் சுலபமான முறையில் கடன்வழங்கும் திட்டமொன்றுக்கும் அரசாங்கம் அங்கீகாரமளித்திருக்கிறதாம்.

இத்திட்டம் பாராட்டி வரவேற்கவேண்டியது நல்ல இனப்பசுக்களை இறக்குமதி செய்வதற்கும் ஒரு திட்டமிருந்தது. கால் நடை வளர்ப்பைப் பெருக்குவதற்கு இவை பெரிதும் உதவும். ஆனால் திட்டங்கள் திட்டங்களாக இல்லாமல் துரிதமாகச் செயல்படுவதில் தான் அவற்றின் வெற்றி பெரிதும் தங்கியிருக்கிறது.

# 475 பொலிசாருக்கு தற்காலிக வேலைநீக்கம்

## டி. ஐ. ஜி. முனிதாஸ தகவல்

(கொழும்பு)

இவ்வாண்டு 475 பொலிஸ் உததியோகத்தர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை உதவிப்பொலிஸ் மா அதிபர் திரு. பி. எல். முனிதாஸ கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மத்தியில பேசுகையில் வெளியிட்டார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 600 பிரஜைகளுக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் வீதம் இருப்பாரென்று குறிப்பிட்ட அவர் இவ்வருடம் 232 பொலிஸ் உததியோகத்தர்கள் இளைப்பாறுகின்றரென்றும் 101 பேர் சேவை எல்லை முடிவடைய முன்னரே இளைப்பாறுகின்றனரென்றும் 17பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனரென்றும்தெரிவித்தார்.

# அடுத்த 5 வருடத்தில் 24,000 பொலிஸார்!

வருடாவருடம் 4000 பேர் பொலிஸ் சேவைக்குப் புதிதாகச் சேர்க்கப்படவிருக்கிறார்கள். அடுத்த ஐந்து வருடமுடிவில் பொலிஸ் சேவையில் 24,000 பேர் இருப்பார்கள்.

திரு.முனிதாசா தொடர்ந்து கூறியதாவது: நாட்டிலுள்ள பொலிஸ் சேவையில் 17,278 பேர் கடமையாற்றுகின்றனர்.

தற்போது விசேஷ பொலிஸ் சேவையில் 8391 பேர் இருக்கிறார்கள். இதனை 16,000 ஆக அதிகரிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.தொகுதிக்கு 100பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்கள்.

இந்தவருடம் வங்கிக் கொள்ளைகள் குறைந்துள்ளது என்று உதவிப பொலிஸ மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது: குற்றம் புரிபவர்கள் கையுறைகளைப் பாவித்து வருவதால், கைவிரல் அடையாளம் மூலம் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறது.

24 மாவட்டங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களில் அந்தந்தப் பகுதி ஐ ஆர். சி.களின், புகைப்படங்களை தொங்கவிட ஒரு திட்டம் இருக்கிறது.

இவ்வருடம் 54,000 ரூபா மட்டுமே வங்கிக்கொள்ளை நடந்துள்ளதாகவும் அவர் கூறினார். (க)

## விமானப் பயணிகள்

# அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும்

(கொழும்பு)

விமானப் பயண ரிக்கட்டுகள் பெறுவதற்கு பிரயாணிகள் தத்தம் அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சுக்கு விமானசேவை விமானமோட்டிகள் சங்கம் சிபார்சுசெய்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள முறையில் உள்ள முறைப்படி பயணி ஒருவரை அடையாளம் கண்டுகொள்வது சிரமமாக உள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வளாகப் பாதுகாப்பு அதிகாரிபற்றி

# கல்வி அமைச்சருக்கு பத்திரிகை நிருபர்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

ஒன்பது பத்திரிகை நிருபர்களை கைதடியில் உள்ள யாழ் வளாக மருத்துவபீட திறப்பு விழாவிலிருந்து வெளியேற்றிய சம்பவம் தொடர்பாக பத்திரிகை நிருபர்கள் நேற்று கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்னவுக்கு புகார் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்தனர்.

அக்டோபர் 8-ம் திகதி கல்வி அமைச்சர் கைதடி யாழ். வளாக மருத்துவ பீடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்க வந்த போது யாழ். வளாகப் பாதுகாப்புச் சேவைப் பொறுப்பதிகாரியினால் 9 நிருபர்களும் படப்பிடிப்பாளரும் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இதனால் நிருபர்கள் எவரும் விழாவில் பங்குபற்ற முடியவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக கல்வி அமைச்சர் பத்திரிகை நிருபர்களிடமிருந்து புகார்கள் கிடைக்கும் பட்சத்தில் அது பற்றி விசாரணை செய்யப்படும் என அறிவித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து பத்திரிகை நிருபர்கள்,கல்வி அமைச்சருக்கு அச்சம்பவம் பற்றி விசாரணை நடத்துமாறு கோரியுள்ளனர்.

இப்புகாரின் பிரதிகள்,இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தருக்கும், யாழ்ப்பாண வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-அ)



பிறர் இழைத்த தீங்கை வெட்டெனமற. அவர்கள் மாட்டு வெகுளாது அவர்களை மன்னித்து விடு; உன்னை வெறுப்பவனுக்கும் நன்மையேசெய்.

ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி

# ஆனைப்பந்தியில் இன்று

[யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டிடத் திறப்பு விழா இன்று காலை நடைபெறவிருக்கிறது.

வடமாநில வித்தியாதிபதி திரு ரி மாணிக்கவாசகர் மங்களவிளக்கேற்றுவார்.

நல்லூர் எம். பி. திரு.எம். சிவசிதம்பரம் கட்டிடத்தைத் திறந்துவைப்பார்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம், பெற்றோர்-ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. ரி. சபாரத்தினம் உட்படப் பலர் உரையாற்றுவர். (உ)

# புலோலி வங்கிக் கிளை மூடப்படும்

(உடுப்பிட்டி)

இலங்கை வங்கி புலோலிக் கிளை இம்மாதத்துடன் மூடப்படவுளளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கியுடன் தொடர்புடைய வாடிக்கையாளர்கள் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (உ)

# வரணியூரான் நாடகம்

(கொழும்பு)

பிரபல வானொலி நாடக எழுத்தாளரும் நடிகருமான திரு. எஸ். எஸ். கணேச பிள்ளை (வரணியூரான்) எழுதும் 'அமுதசுரபி' நாடகம் பிரதி ஞாயிறும் மாலை 5-15 க்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை இரண்டில் ஒலிபரப்பாகிறது.

பிரபல வர்த்தகர்களான ஐ. சின்னத்துரை பிரதர்ஸ் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் இந் நாடகம் ஒலிபரப்பாகிறது. (ம)




"என்னை வாளால்வெட்டி, இரத்தம் வடிந்தபோது

# இரத்தத்தை முகர்ந்து பார்த்து நல்லெண்ணெவாடை என்றனர்'

(திருமலையிலிருந்து நமது மூதூர் நிருபர்)

"சிங்களவர் என்னை வாளால் வெட்டிய பின்னர் வாளிலிருந்து சொட்டுச் சொட்டாக வடியும் இரத்தத்தை முகர்ந்து பார்த்து, 'நல்லெண்ணெ வாடை வீசுகிறது என்று கூறினர்' என்று திருமலையில் நடைபெறும் சன்சோனி விசாரணைக் கமிஷன் முன்னிலையில் மூதூரை அடுத்துள்ள சம்பூர் கிராமத்தைச் சேர்ந்த கதிரவேற்பிள்ளை ராஜநாதன் சாட்சியமளிக்கையில் கூறினர்

திரு. க. ராஜநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது;-

'எனது வயது 32. நான் சம்பூர் கிராமத்தைச் சேர்ந்தவன். இ. போ. ச. நடத்துனராகப் பணிபுரிபவன். கலவரகாலமான கடந்த ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி' நான் திருமலை இ. போ. ச. டிப்போவில் நடத்துனராகக் கடமையாற்றிவந்தேன்.

### டிப்போவுக்குச் சென்றேன்

'அன்று பிற்பகல் சுமார் ஒரு மணியளவில் எனது கடமையை அறியும் நோக்குடன் 'லவ்லேன்' என்னுமிடத்தில் அமைந்துள்ள திருமலை. இ. போ. ச. டிப்போவிற்குச் சென்றேன்.

'அங்கு, எனக்கு மறுநாள் ஒரு மணிக்குத்தான் கடமை என்று அறிவித்திருந்தார்கள். இதை அறிந்துகொண்டு நான் வீட்டிற்குத் திரும்பினேன். நான் போகும் வழியில் சாம்பல்தீவு என்ற' இடத்தைச் சேர்ந்த திரு. பால்சாமி என்ற எனது நண்பரைச் சந்தித்தேன். திரு. பால்சாமி துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்பவர். அன்று அவர்களது சம்பளதினமாகையால் திரு. பால்சாமி மட்கோவுக்குப் போவதாகவும் என்னையும் அவருடன் துணைக்கு வரும்படியும் அழைத்தார். நானும் சம்மதித்து அவருடன் மட்கோவுக்குச் சென்றேன். அவர் சம்பளம் பெற்றவுடன் நாங்கள் திரும்பினோம்.

### சிங்களத்தில் அழைத்து...

'திரும்பி வரும் வழியில் திருமலைப் புகையிரதக் கடவையில் ஒரு சிங்களக்காடையர் நின்று 'மே என வா யாபணயா' [இங்கே வா யாப்பாணி] என்று வெறித்தனமாக அதிகாரத்தொனியுடன் என்னைச் சிங்களத்தில் அழைத்தார். அப்பொழுது நேரம் இரண்டு மணியிருக்கும். என்னை அழைத்தவரது கையில் 'பளிச்'சென மின்னும் கத்தி ஒன்று இருந்தது.

## சன்சோனி விசாரணைக் கமிஷன்

இவர் என்னை அழைக்க நாங்கள் இருவரும் பயத்தால் ஓட ஆயத்தமானோம்.

### கத்தியால் குத்தினர்

'அத்தருணம் மேற்கூறப்பட்ட காடையர், என்னை அணுகி அவர் கையிலிருந்த கத்தியால் என்னைக்குத்தினர். நான் அவரது கையிலிருந்த கத்தியை எனது சாதுரியத்தால் தட்டிவிட்டு மறுபக்கமாக ஓடமுயன்றேன். அக்காடையர் எனது சைக்கிளின் பின் 'மட்காட்டை'ப் பிடித்து இழுத்து என்னை ஓடவிடாது தடுத்தார். தடுத்தவர் மீண்டும் என்னை நோக்கிக் குத்தினர். நான் மீண்டும் கத்தியைத் தடுத்துப்பிடித்தேன்.

### கழுத்தில் வெட்டி...

'ஆத்திரம் கொண்ட அவர் எனது கழுத்தில் வெட்டினர்.'

'அத்தருணம் மேலும் 3 சிங்களக்காடையர் கூச்சலிட்டுக்கொண்டு கத்தி, வாள் முதலியவைகளுடன் என்னை நோக்கி ஓடிவந்தனர்.'

'அப்படி ஓடிவந்தவர்களில் ஒருவர் என்னை நோக்கி வெட்டினர். நான் தடுத்துப் பிடித்தபோது எனது கையில் மூன்று வெட்டுகள் விழுந்தன. கத்தியைப் பறிக்க முயன்றபோது விரலில் காயம் ஏற்பட்டது. இதனால் இன்னமும் என்னால் விரலை மடக்கமுடியவில்லை.

### பல தடவைகள் வெட்டினர்கள்

'இதன் பின்னர் என்னைப் பலதடவைகள் வாளால் வெட்டினர்கள்.

'வேறொருவர் எனது காலில் கத்தியால் வெட்டினர். அதே ஆசாமி எனது நெஞ்சிலும் அடித்ததால் நான் கீழே விழுந்தேன். நான் நிலத்தில் விழுந்த பின்னர் எனது முகத்தில் வெட்டினர்.

"எனது தலையைத் திருப்பி வெட்டித் துண்டாட முயன்றபோது, நான் செத்தவன் போல் கிடந்தேன். உடனே அவர்கள் எனது தலையை வெட்டும் முயற்சியைக் கைவிட்டு, எனது காதை அறுத்தனர். அதன்பின் சிறிது தூரம்சென்று ஒரு பெரியகல்லை எடுத்து எனக்குமேல் தூக்கி எறிந்தனர். அக்கல் அருகில் இருந்த கம்பத்தில்பட்டு மோதி எனது காலில் விழுந்ததால் எனது கால் எலும்பு தகர்ந்துள்ளது.

"இத்தனை கொடுமைகளும் எனக்குச் செய்ததன் பின்பும் அவர்கள் என்னை விட்டு அகலவில்லை. சுமார் 15 நிமிடங்கள் வரை நான் செத்தவன்போல் கிடந்தேன்.

"அத்தருணம் திடீரென அவ்விடத்திற்கு கடற்படையினர் 'ஜீப்' வண்டியில் வந்தனர். ஜீப் வண்டி வருவதைக் கண்ட காடையர்கள் ஓட்டம் எடுத்தனர்.

"இது தான் நடந்தது. சிங்களக் காடையர்கள் என்னைப் பொறுத்த மட்டில் மனிதாபிமானம் அற்றமுறையில் மிருகத்தனமாக என்னைத்தாக்கியுள்ளனர்.

### ஒன்றரைமாதம் சிகிச்சைபெற்றேன்

"உடனடியாக நான்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். தொடர்ந்து ஒன்றரை மாதகாலம் சிகிச்சை பெற்றுள்ளேன்.

"இந்த அசம்பாவிதத்தின் பின்னர் என்னால் வேலைசெய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

"கடந்த பெப்ரவரி மாதம் முதல் எனக்கு வேதனமும் கிடைக்கவில்லை" என்றார்.

சாட்சியின் கை, கால்கள், கழுத்து, மார்பகம், தொடை, கைவிரல்கள் உட்பட உடம்பில் பல காயங்கள் ஏற்பட்ட பயங்கரத் தழும்புகள் இருப்பதும் இவரது கைவிரல்கள் மடக்க முடியாத நிலையில் இருக்கும் விபரமும் கமிஷனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

பன்குளத்தைச் சேர்ந்த பத்திரப்பன் சண்முகம் தனது சாட்சியத்தின் போது கூறியதாவது:

"1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி இனக்கலவரம் நடைபெற்ற வேளையில் நான் திருமலையை அடுத்துள்ள நடேசர் கோவில் பகுதியில் குடியிருந்தேன். அங்கு இலங்கை வங்கியைச் சேர்ந்த 'காசாளர் சிவஞானமும் குடியிருந்தார். சம்பவதினம் இரவு 10 மணி அளவில் நானும் சிவஞானமும் கோவில் படியில் அமர்ந்திருந்தவாறு பேசிக்கொண்டிருந்தோம். நடேசர் கோவில்படியில் இருந்து சிவஞானத்தின் வீடு 4 அல்லது 5 யார் தூரத்திலேயே இருக்கிறது.

### வங்கிக்காசாளர் படுகொலை

"அன்றைய தினம் இரவு சுமார் 15 நிமிடமளவில், சிவஞானத்தின் நாய்குரைகும் சத்தம் கேட்டது. உடனே சிவஞானம், தனது டோர்ச் லைட்டை ஏற்றிய வண்ணம் தனது வீட்டை நோக்கி நடந்தார். அவர் போய் சிறிது நேரத்தில் துவக்குச் சூட்டுச் சத்தம் கேட்டது. இதை அடுத்து திரு. சிவஞானம் "ஐயோ—அம்மா"- என்று கத்தியவாறு கீழே விழுந்தார்.

"இந்த வேளை பயத்தினால் கோவிலில் பல தமிழ் மக்கள் ஒளித்திருந்தனர். இவர்களில் எவரும் பயத்தினால் சம்பவம் நடந்த இடத்திற்குப் போகவில்லை.

"சிவஞானம் கொலையுண்ட சில நிமிடங்களில் இராணுவத்தினர் ஜீப்வண்டியில் அவ்வழியே வந்தனர். நான் ஓடிச் சென்று ஜீப் வண்டியை மறித்து நடநத சம்பவத்தை அவர்களிடம் கூறினேன். அவர்கள் தாங்கள் இது பற்றிப் பொலிசில் அறிவிப்பதாகக் கூறிச் சென்றனர்.

### பொலிஸார் வரவில்லை

"இந்த அசம்பாவிதத்தின் போது இராஜேந்திரம் என்னும் நடேசர் கோவில் உதவியாளரும் காயமடைந்தார்.

"இராணுவத்தினர் அப்படிக் கூறிச் சென்றனரே ஒழிய இது விடயமாக மறுநாள் காலை 10 மணிவரை பொலிசார் சிவஞானம் கொலையுண்ட இடத்திற்கு வரவில்லை. 23ம் திகதி காலை சிவஞானத்தின் சடலத்தை நாங்கள் பார்த்தோம்.

### சடலத்தைத்தர மறுத்தனர்

"சிவஞானம் யாழ்ப்பாணத்தவர். அதனால் அவரது சடலத்தை யாழ்ப்பாணம் எடுத்துச் செல்ல அனுமதி கேட்டோம். எங்களுக்கு அந்த அனுமதி மறுக்கப்பட்டது. அதற்குப் பதிலாக கன்னியாவில் தகனம் செய்யுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டனர்" என்றார்.

## "தமிழிலேயே வழக்குகளை நடத்த வேண்டும்"

### பரு. சட்டத்தரணிகள் சங்கம்தீர்மானம்

(புலோலி)

வடபகுதியிலுள்ள சகல நீதிமன்றங்களிலும் தமிழிலேயே சட்டத்தரணிகள் வழக்குகளை நடாத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றைப் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

வழக்குகள் அனைத்தையும் தமிழில் நடத்துவதற்கு போதிய உரிமை இருப்பதனால், அதனை நன்கு நடைமுறைப்படுத்துமுகமாக, பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் சகல வடபகுதி சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து இதுபற்றி வற்புறுத்தவுள்ளது.

பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம், ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நீதிநிர்வாக பிரிவுகளுக்குள் உள்ள சகல சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதிகளையும் அழைத்து இதுபற்றி வலியுறுத்துவதற்கான கூட்டமொன்றை நடாத்த பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (உ)

## அமைச்சர் சுற்று விஜயம்

(கொழும்பு)

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமான் இன்றும் நாளையும்பேராதனை, கேகாலை, குளியாப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு விஜயம்செய்வார்.

இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பல அபிவிருத்தித் திட்டங்களையும் அமைச்சர் பார்வையிடுவார்.


சுத்தமான சுவையான

**ஐஸ்கிறீம் பவுடர்**

டென்மார்க் தேசத்தின் உலகப்பிரசித்திபெற்ற

**லிடானே** ஐஸ்கிறீம் பவுடர்

மூன்று நறுஞ்சுவைகளில் கிடைக்கும்:-

∵ வனிலா ∵ ஸ்ரோபெறி ∵ சொக்லெற்

1 பங்கு ஐஸ்கிறீம் பவுடரை 1 1/3 பங்கு தண்ணீரில் கொட்டி நன்றுக அடித்து குளிரூட்டவும். ஐஸ்கிறீம் தயாராகிவிடும்.

கவனிப்பு:- குளிரூட்டியில் வைத்து சிறிது உறைந்ததும் அதனை எடுத்து நன்றுக அடித்து திரும்பவும் குளிரூட்டவும்.

இலங்கை ஏக விநியோகஸ்தர்கள்:-

**சமுத்திரா ட்ரேட்ஸ் லிமிட்.,**

23/2, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7236, தந்தி: சமுத்திரா - யாழ்ப்பாணம்.

விற்பனையாளர் ஆவதற்கு தொடர்பு கொள்ளவும்.


தட...
திட...

(திருமலையி...
நமது மூ...

"திருகோண...
யில் தமிழர்களை...
வதற்கென்று,...
மிட்ட இயக்கம்...
செயல்படுகிறது...
நான் நன்கு...
என்று, பாலையூ...
தேசிய கட்சிக்...
வர் விக்கிரமநா...
சேன சன்சோ...
கமிஷன் முன்னி...
சியமளிக்கையில்...
வித்தார்.

அவர் தமது சா...
மேலும் கூறியதாவ...

"அமரர் செ...
அஸ்தி கொண்டு...
போது இடம்பெ...
மக்களின் ஊர்வல...
மக்களை ஆத்திரம்...
வகையில் அமைந்தி...
'சிறிமாவோபுர' ...
கள் தமிழர்களைத்...
கம் ஏற்படுத்தியிருக்...

### சமாதானமாக வாழ விரும்புகி...

"நான் திருகோ...
தமிழர்களுடன் சம...
கவே வாழ்வின்றே...
விரும்புகிறேன். எ...
யில்உள்ள தமிழர்க...
தாக்கப்படவில்லை.

"பாலையூற்றுப்...
லார்துமாதா வீ...
ஒரு வீதி இருக்...
அப்படி இருந்தா...



## "திருகோணமலையில்

# தமிழரைக் குடியேற்ற திட்டமிட்ட இயக்கம்!"

### ஐ. தே. க. கிளைத்தலைவர் சாட்சியம்

(திருமலையிலிருந்து நமது மூதூர் நிருபர்)
"திருகோணமலைப் பகுதி
ல் தமிழர்களைக்குடியேற்று
தற்கென்று, ஒரு திட்ட
ட்ட இயக்கம் தீவிரமாகச்
சயல்படுகிறது. இதை
ான் நன்கு அறிவேன்"
ன்று, பாலையூற்று ஐக்கிய
தசிய கட்சிக் கிளைத் தலை
ர் விக்கிரமநாயக்கா சிறி
ன சன்சோனி விசாரணை
மிஷன் முன்னிலையில் சாட்
யமளிக்கையில் தெரிவித்
த்தார்.
வர் தமது சாட்சியத்தில்
ும் கூறியதாவது!
அமரர் செல்வாவின்
ி கொண்டுவரப்பட்ட
து இடம்பெற்ற தமிழ்
வின் ஊர்வலம், சிங்கள
ள ஆத்திரம் ஊட்டும்
யில் அமைந்திருந்ததனுல்
மாவோபுர' சிங்கள மக்
தமிழர்களைத் தாக்கிக் கல
ரற்படுத்தியிருக்கலாம்.

**தானமாக**

**ழ விரும்புகிறேன்**

நான் திருகோணமலையில்
ர்களுடன் சமாதானமா
வாழ்கின்றேன், வாழ
ிறகிறேன். எனது பகுதி
ள்ள தமிழர்கள் எவரும்
கப்படவில்லை.
பாலையூற்றுப் பகுதியில்
துமாதா வீதி என்று
வீதி இருக்கவில்லை.
இருந்ததாக நான்
கேள்விப்படவில்லை. எச்சந்தர்ப்பத்திலும் நான் அப்படி "லூர்து மாதாவீதி" என்று எழுதப்பட்ட பெயர்ப்பலகையை அகற்றியது கிடையாது. அந்த வீதி நான் அறிந்தமட்டில் 'பெரகும்பா வீதி' என்றே இருந்தது. இதைவிட 1977-ல் ஏற்பட்ட கலவரத்தின்போது தமிழர்கள் சிங்களவரைக் கொடுரமாகத் தாக்கினர். உடைமைகளைச் சேதப்படுத்தினர்.

"நான் குடியிருக்கும் பாலையூற்றுப்பகுதி உப்புவெளிக் கிராமப் பிரதேசத்திற்குட்பட்டபகுதியாகும். கடந்த பொதுத்தேர்தலின்போது எனது பகுதியில் பல சிங்கள வாக்காளர்களின் பெயர்கள் பதியப்படவில்லை. இப்பகுதித் தமிழ் இளைஞர்கள் பல?, பல விதப்பட்ட பயங்கர ஆயுதங்களைச் சேகரிப்பதை நான் அறிவேன்.

"எனது பிறப்பிடம் காலி நகராகும். நான் அங்கிருந்து இங்கு வந்து குடியேறியதால் எதுவித விசேட லாபமும் அடைந்துவிடவில்லை. என்ஞல் எனது பகுதிவாழ் மக்கள் பலர் லாபம் அடைகிருர்கள் என்பது உண்மையே" என்ருர்.

### தேர்தலில் 53 வாக்குகள்

கடந்த பொதுத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு கட்டுப் பணத்தை இழந்த திரு. ஏ. பி. ஜி. பேபிசிங்கா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நான் கடந்த பொதுத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளஞகப் போட்டியிட்டேன். எனக்கு 53 வாக்குகளே கிடைத்தன. இதஞல் நான் கட்டுப் பணத்தையும் இழந்தேன்.

"தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்குச் சென்றுள்ளேன். ஒரு கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், சிங்கள மக்களை வலைமையாகத் திட்டினர். சிங்களவரை ஹபரணைக்கு அப்பால் ஓட ஓட விரட்டுவோம் என்று அவர் கூறினர் நான் இக்கூட்டம் நடைபெற்ற இடத்திற்குச் சமீபமாக சுமார் 150 யார் தூரமளவிலேயே நின்று இந்த வார்த்தைகளைக் கேட்டேன்" என்ருர்.

சட்டத்தரணி திரு. சிவா- இராஜரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

## விசாரணை நடைபெறுகிறது

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சட்டபூர்வமான முறையில் நடத்தப்படவில்லை என்ற புகாரின் பேரில், யாழ். மேலதிக கூட்டுறவு ஆணையாளர் இது குறித்து விசாரணையில் இறங்கியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் கிளைக்குழுக்களிலிருந்து தெரிவானதுசட்டபூர்வமானதாக நடைபெறவில்லையென்றும், கிளைக்குழு மூலமான இயக்குனர் தெரிவு முறையாக நடைபெறவில்லையெனவும் புகார்தெரிவிக்கப்பட்டதன்பேரில், யாழ். மேலதிக கூட்டுறவு ஆணையாளர் திரு. நவரத்தினம் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

## "காங்கிரஸ் கொள்கைக்கு கிடைத்தவெற்றி இது"

[யாழ்ப்பாணம்]

"முதலில் பொருளாதார அபிவிருத்தி என்பது தான் தமிழ்க்காங்கிரஸின்கொள்கை மூதலில் தமிழ் ஈழம் பின் பொருளாதாரம் எனக்கூட்டணியினர் தேர்தல் காலத்தில் கூறிவிட்டு இன்று பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை காட்டுகிருர்கள். இது தமிழ்காங்கிரஸ் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும்"

புத்தூரில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் கருத்தரங்கில் பேசிய தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறிஞர்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தலைமையில் நடந்த கருத்தரங்கில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது

"1947-ம் ஆண்டு முதல் தமிழ்க்காங்கிரஸ் தமிழ்ஈழத் பொருளாதாரத்தில்தான் அக்கறை காட்டிவந்தது. கடந்த தேர்தலின்போதும் நான் தமிழ் ஈழத்தின் பொருளாதார அபிவிருத்திபற்றி வலியுறுத்தினேன். ஆஞல் கூட்டணியினர் வெற்றி பெறுவதற்காக முதலில் தமிழ் ஈழம், பின்பொருளாதாரம் என்று கூறிஞர்கள் தேர்தலில் வெற்றிபெறறபின் பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை காட்டிவருகின்றனர். தமிழ்க்காங்கிரஸின் பொருளாதாரக்கொள்கையை அவர்கள் பின்பற்றுகின்றனர் இது காங்கிரஸிற்கு கிடைத்த வெற்றியாகும்."

திருவாளர்கள் ரி. மகேந்திரராஜா, வி. பஞ்சலிங்கம் ஆகியோரும் பேசிஞர்கள்.

(க-அ)

# ஈழமாணவ பொதுமன்ற 2-வதுமகாநாடு

## லண்டனில் நடைபெறுகிறது

(லண்டன்)

ஈழ மாணவ பொது மன்றத்தின் இரண்டாவது மாணவ மகாநாடு நேற்று இங்கு ஆரம்பமானது.

இன்று சனிக்கிழமை தொடர்ந்து நடைபெறும் இம்மகாநாட்டைத் தொடர்ந்து இன்று மாலை பொதுக் கூட்டமொன்று நடைபெறுகிறது.

லண்டன் ஹவுட்டன் வீதியிலுள்ள, "லண்டன் ஸ்கூல் ஒவ் எக்கனேமிக்ஸ்" கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இம்மகாநாட்டில் இன்று காலை முதல் மாலை வரை கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

இன்று மாலை லண்டன் வோடென் வீதியிலுள்ள லிண்டேஸ்ட் மண்டபத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சர்வதேச இயக்கங்களின் பிரதிநிதிகள், மாணவத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கருத்துரை வழங்குவார்கள்




# டெக் கொண்டு அழகை அழையுங்கள்.

கீதா குமாரசிங்க

அப்படியே செய்கிருர். அவர் டெக் உபயோகிக்கிருர்.
டெக் விஞ்ஞான முறைப்படி செய்யப்பட்டது. பழுப்பையும்,
சொத்தையையும் வெளியேற்றி, பிரகாசத்தை வழங்குவது. ஒரு 'டெக்'
பிரஷுடன் மூன்று நிமிடங்கள்..... நாள் முழுவதும் உங்கள் பற்களுக்கு
பிரகாசம் வழங்கும். உங்கள் புன்சிரிப்புக்கு அழகூட்டுங்கள். காலையில்
துயிலெழுந்த உடனேயும் இரவில் படுக்கைக்கு போக முன்னருமாக
தினமும் இரண்டு தடவை டெக் உபயோகியுங்கள்.

ஏஜன்டுகள்:-
CIC கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு)லிட்.,
ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6

GRANT K & E 671

# "அரசியலில் இந்திரா இருப்பது ஜனதா அரசு பண்பினுல்தான்"

## சிக்மகளூரில் 'சோ' பிரசாரம்

திருவனந்தபுரம், அக். 27

"திருமதி இந்திராகாந்தி இன்னமும் அரசியல் உலகில் இருப்பது ஜனதா அரசின் நல்ல பண்பினுல்தான்.

"இவ்வாறு தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளரும், திரைப்பட நடிகருமான சோ (இராமசாமி) சிக்மகளூர் இடைத் தேர்தலில் ஜனதாக்கட்சி வேட்பாளரை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினுர். தமது ஆட்சிக் காலத்தில் நெருக்கடிநிலையை அமுல்செய்து பாட்டாளி மக்களின் உரிமைகளைப் பறித்தவர் திருமதி காந்தி என்று அவர் குற்றஞ்சாட்டினர்.

ஜனநாயகம் காப்பாற்றப் படவேண்டுமானுல் ஜனதா வேட்பாளர் திரு. வீரேந்திர பட்டீலை ஆதரிக்கவேண்டும் என்று அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார். (உ)

## அரசியல் கைதிகள் விடுதலையாவர்

லண்டன், அக். 27

ஈரானில் தொடர்ந்து அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றபோதிலும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது உறுதி என்று ஈரானிய மன்னர் ஷா அறிவித்துள்ளார்.

மன்னரின் 59-வது பிறந்த தினத்தை யொட்டி 1126 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டுமெனக்கோரி ஆசிரியர்கள், மாணவர்கள், அரசியல் வாதிகள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (உ)

## "அந்தனி விவகாரம்: உறுதியான முடிவு"

திருவனந்தபுரம், அக். 27

தாம் பதவியில் இருந்து ராஜினுமா செய்வதென்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கேரள முதல்மந்திரி திரு. ஏ. கே. அந்தனி உறுதியாகத் தெரிவித்திருக்கிறுர்

இதேவேளை திரு. அந்தனியின் ராஜினுமா முடிவைக் கைவிடச்செய்யும் வகையில் ஹைதராபாத்தில் இருந்து உடனடியாக திருவனந்தபுரம் திரும்புமாறு காங்கிரஸ் தலைவர் திரு சுவர்ண்சிங் திரு. பிரமானந்தரெட்டியைக் கேட்டுக்கொண்டுள்ளார். பார்லிமெண்ட் குழுவை மீண்டும் கூட்டலாம் என்றும் அவர் கூறியிருக்கிறுர்,

திரு. அந்தனி ராஜினுமாச் செய்யும்பட்சத்தில் யாரை புதிய முதல்மந்திரியாக நியமிப்பது என்பது பற்றியும் திருவனந்தபுரத்தில் காங்கிரஸ் வட்டாரங்கள் நேற்றிரவு மும்முரமாக ஆராய்ந்தன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சிக்மகளூர் இடைத் தேர்தலில் திருமதிஇந்திராகாந்தியை ஆதரிக்கும்வகையில் உத்தியோகபூர்வ காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியதினுல் திரு. அந்தனி அதிருப்தியடைந்தார் என்பது தெரிந்ததே. (உ)

## தேர்தல் சட்டத்தில் திருத்தம்

புதுடில்லி, அக். 27

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார், (உ)

## வாஷிங்டன் பேச்சுக்கள் பிசுபிசுக்கின்றன!

வாஷிங்டன், அக். 27

வாஷிங்டனில் இஸ்ரேலுக்கும், எகிப்துக்கும் இடையே நடைபெற்றுவருக் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடையும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இப் பேசுவார்த்தைகளின் பொருட்டு இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் ஜெனரல் மோஷேதயான் வாஷிங்டன் வந்துள்ளார்.

இஸ்ரேல் கைப்பற்றிய பிரதேசங்களில் யூதக்குடியேற்றத்தை நடத்துவது என்ற இஸ்ரேலின் புதிய தீர்மானத்தினுலேயே பேச்சுவார்த்தைகளில் முறிவுநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து எகிப்திய பேச்சுவார்த்தைப் பிரதிநிதிகள் கெய்ரோவுக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

### கார்ட்டர் கவலை

இஸ்ரேலின் இப்புதிய திட்டம் சமாதானத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் என்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் கவலை தெரிவித்துள்ளார். (உ)

## பத்தாண்டுபகை மறைந்தது; ஈராக், சிரியா இணைந்தன!

லண்டன், அக். 27

ஈராக்கும், சிரியாவும் தமது பத்து வருட காலப் பகைமையை மறந்து பரஸ்பர நட்புறவை வளர்த்துக் கொள்ளவுள்ளன.

சிரிய அதிபர் அல்-அசாத் ஈராக்கிற்கு மேற்கொண்ட விஜயத்தினையடுத்து இப்புதிய நிலை ஏற்பட்டுள்ளது. இரு நாட்டுத் தலைவர்களும் புதிய திட்டம் ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

இதற்கமைய அரசியல், பொருளாதார இராணுவ ஒத்துழைப்புகள் இடம்பெறும். (உ)

## சீன-அமெரிக்க வர்த்தக வளர்ச்சி

வாஷிங்டன், அக். 27

தகவல் செயற்கை கோளை, சீனுவுக்கு அமெரிக்கா விற்க முடிவுசெய்துவிட்டதாக அசோஷியேட்டட் பிரெஸ், செய்தி வெளியிட்டுள்ளது.

இதனுடன் தரையிலுள்ள நிலையங்கள், ரேடியோ, டெலிவிஷன் சமிக்ஞைகளை பெறுவதற்கும் அனுப்புவதற்குமான அதிநவீன தளபாடங்களையும் அமெரிக்கா விற்பனைசெய்யும். இந்த செயற்கை கோளை அனுப்பிவைக்கும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது சீன நிபுணர்களுக்கும் இத்துறையில் பயிற்சியளிக்கும். இந்த விற்பனையின் பெறுமதி, சில கோடி டாலர் என்று கூறப்படுகிறது.

இச்செய்தியை பிரசுரித்துள்ள 'வாஷிங்டன் போஸ்ட்' அமெரிக்க-சீன வர்த்தக, தொழில்நுட்பத் தொடர்புகள அற்புதமாக விருத்தியடைந்துள்ளதாகக்கூறுகிறது.

"இந்த அமெரிக்க விற்பனை எடுபடாது என உணர்ந்த அரசாங்க வட்டாரங்கள், சீனுவுக்கு அதன் இராணுவ தகவல் சாதனங்களை நவீனமயமாக்க, விற்பனை உதவும் என்பதை ஏற்றுக்கொள்கின்றன" என்று அசோஷியேட்டட் பிரெஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

சீனுவின் வெளிநாட்டுக் கொள்கையை அமெரிக்காவுக்கு சாதகமாக உபயோகித்துக்கொள்ள விரும்பும் சில வாஷிங்டன் அரசியல் வட்டாரங்கள், இந்த வாஷிங்டன்-பீகிங் ஒப்பந்தத்துக்கும் பின்னுல் இருப்பதாகவும் பத்திரிகைள் கூறுகின்றன.

## ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை: தான்ஸானிய அதிபர்கருத்து

லண்டன், அக். 27

"ஆபிரிக்க முன்னணி நாடுகள் தமக்குள் ஒற்றுமை இருக்கவேண்டியதன் அவசியத்தைஇப்போதுதான் உணர்ந்துகொண்டுள்ளன" என்று தான்ஸானிய ஜனுதிபதி நியரேரே கருத்து வெளியிட்டுள்ளார்.

ரொடீஷியா ஸாம்பியா மொஸாம்பிக் பகுதிகளில் கடந்த வாரம் நடத்திய கடும் தாக்குதல்களையடுத்து 5 ஆபிரிக்க முன்னணி நாடுகள் ஒன்று கூடி மாநாடு ஒன்றினை நடத்த விருப்பது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னுர்.

### பிரிட்டன் ஆயுதங்கள்

இதேவேளை, பிரிட்டன் ஆயுதங்களின் முதல் பகுதி ஸாம்பியாவுக்கு உடன் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஸாம்பிய கெரிலாத் தளங்களை ரொடீஷியா தாக்கியதனையடுத்து ஸாம்பியாவுக்கு பிரிட்டன் இராணுவ உதவி வழங்கும் என்று பிரிட்டன் வெளிநாட்டமைச்சர் கலாநிதி டேவிட் ஒகன் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பிரயாணிகள் தங்குமிடம்

[நெல்லியடி]

நெல்லியடி பஸ்பிரயாணிகளின் நலன் கருதி விரைவில் நெல்லியடி பஸ் நிலையத்தில் தங்குமிடம் அமைக்கப்படவுள்ளது.

தங்குமிடம் அமைப்பதற்கான இடத்தினை நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிறைவேற்று பொறியியலாளர் திரு. எஸ். ஜெயவீரசிங்கம் நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்.


யூ ஆசா உத்வேகத்துக்கு மற்றுமோர் பெயர்



இயக்க மோட்டர்கள் விர்...
என செயல்படும்
பிளக்குகள் பளிச்சிடும்...
யந்திரங்கள் உயிர்பெற்றெழும்...
சக்கரங்கள் சுழலும்...
லைட்டுகள் பிரகாசிக்கும்...
"யூஆசா" சக்தியினுல் பொருட்கள்
நகரத் தொடங்கி விடுகின்றன




விற்பனைக்கு பிந்திய சேவை :
நாடு பூராவுமுள்ள அதிகாரம் பெற்ற விற்பனையாளர் மூலமும்
மற்றும்
யூஆசா சேவை நிலையம்
161, பார்ஸன்ஸ் ரோட்,
கொழும்பு - 2

தயாரிப்பாளர்கள் :
அஸோசியேட்டட் பற்றறீஸ் கம்பனி லிமிட்.
ஏக விநியோகஸ்தர்கள் :
E. B. கிறீஸி அன் கம்பனி லிமிட்.
98, சிறி சங்கராஜ மாவத்த, கொழும்பு-10, தொலைபேசி : 2131-4

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - மஞ்சுளா
எங்கள் தங்கராஜா

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-ஜெய்சித்திரா
இன்ஸ்பெக்டர்மனைவி

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நிலவே நீ சாட்சி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
SYDNEY JAMES in
THE BIG JOB [Colour]

சாந்தி (யாழ்ப்பாணம்)
தீபாவளித் திரைவிருந்து!
போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஏ. வி. எம். ராஜன், நிர்மலா, சந்திரபாபு, மனோரமா
புதிய பிரதி
அவள்
வண்ணப்படம்

175 வது தின வெள்ளி விழாவை நோக்கி
வீறுநடை போடுகிறன்.
தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன் (சினிமாஸ்கோப்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி
நடித்த
மர்மயோகி (புத்தம்புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

தீபாவளி வெளியீடு!
வின்ஸர்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
∴ சிவராம் ∴ சந்திரகலா
தனரத்தினம் - அனுஜா
செல்வம் பெர்னாண்டோ
டொன் பொஸ்கோ
மாஸ்டர் ஹஷி
ஆகியோர் நடித்த
சமத்கார பிலிம்ஸ்
அநுராகம்


## இராசிப்பலன் இன்றைய

ஐப்பசி மாதம் 11-ந் திகதி
சனிக்கிழமை
(28-10-78)

**மேடம்:-** நினைத்தது நடக்கும், பந்துக்களின் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு, பிதாவழிமூலம் பொருள்வரவிற்கிடமுண்டு.

**இடபம்:-** வியாபாரத்துறையில் துரித முன்னேற்றம், புதுத்துறைகளில் மனம் நாடுதல் பயன்தரும், பிரயாணம் நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின்துணையுமுண்டு.

**மிதுனம்:-** பொருள் வரவிற்கு இடமுண்டு, பெரியோர் ஆதரவுமுண்டு, பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடிவரும்.

**கடகம்:-** எதிர்பாராத செலவினங்களால் பாதிக்கப்படுவீர்கள், சிலர்கடன் படவும் நேரிடும், தொழிலிலும் தொல்லைகள் உண்டு.

**சிங்கம்:-** சுறு சுறுப்புக்குன்றும், உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையீடு

**கன்னி:-** மனம் நிறைந்த வாழ்வு, மக்களால் மகிழ்ச்சி கண்ணியமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும், செல்வாக்குப் பெரும்.

**துலாம்:** சிந்தனை அலைகள் மோதும், செய்தொழிலில் பதட்ட நிலை தென்படும், பலவழிகளிலும் பணம் செலவாகும, உடல் நலத்தைப் பேணிக் கொள்ளவும்,

**விருச்சிகம்:-** கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மகிழ்வீர், கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும், சுபதினம்.

**தனுசு:-** உள்ளத்தில் உவகைக் கூத்து, வாழ்க்கை உற்சாகம் நிறைந்ததாகவிருக்கும், மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும்.

**மகரம்:-** கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும், போக்குவரத்து விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், திடீர்த்திருப்பம் உங்களைத் திகைக்க வைக்கலாம்.

**கும்பம்:-** எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும், மற்றவர்கள் மெச்சும் வண்ணம் கடமையாற்றுவீர்கள், வேண்டியவர்களின் ஆதரவும் பெருகும்.

**மீனம்:-** பிரச்சினைகள் மேலும் சிக்கலாகும், உணவு விடயத்தில் பிரியக்குறைவு தென்படும், அக்கினி ஆயுத பீடைக்கிடமுண்டு, உடல்நலனில் அதிககவனம் செலுத்தவும்.

**சோதிடக்கலாநிதி**
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## விதை கிழங்கு விநியோகம்

(பண்டத்தரிப்பு)

இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகளை பெறவிரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதிகளிலுள்ளபயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களிடம் அந்தருக்கு ரூபா 560 செலுத்தி பதிவுசெய்துகொள்ளுமாறு தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத் திரு. தவராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

விதை உருளைக் கிழங்குக்கான பசளை, கிருமிநாசினி என்பனவும் விவசாயிகளுக்கு வழங்கப் படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ADRIFT
(Adults Only)




சமீபத்தில் இலங்கை சட்டக்கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடமிருந்து இறுதி ஆண்டு மாணவியாகிய செல்வி தயாளினி. ஆறுமுகம் பரிசில் பெறுவதை இங்கு காணலாம் இவர் சுண்டுக்குளி மகளிர்கல்லூரி பழைய மாணவியும் புகையிரத திணைக்களத்தை சேர்ந்த திரு.கே. எஸ். ஆறுமுகம் தம்பதிகளின்புதல்வியுமாவர்.

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 2 கோல்களைப் போட்டு போட்டியைச் சமமாக முடித்துக் கொண்டன

### கொக்குவில் இந்து வெற்றி

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையே யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 2-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

3-ம் பிரிவுக்கான போட்டியில் இரு கல்லூரிகளும் கோல்களை அடிக்காது ஆட்டம் சமமாக முடிந்தது.

### வெற்றி தோல்வி இல்லை

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், யாழ். சம்பத்திரிசியார்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியின் 1-ம் பிரிவில் இரு கோஷ்டிகளும் தலா மூன்று கோல்களைப் போட்டு சமமாக ஆட்டத்தை முடித்துக்கொண்டன.

2-ம் பிரிவுப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

3-ம் பிரிவில் சம்பத்திரிசியார் கல்லூரி 3—1 கோல்களால் வெற்றியீட்டியது.

### உரும்பராய் வெற்றி

குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்திற்கும், உரும்பராய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடந்த போட்டி உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது 2-ம் பிரிவில் உரும்பராய் இந்துக் கல்லூரி 3—0 கோல்களால் வெற்றியீட்டியது.

3-ம் பிரிவிலும் உரும்பராய் இந்துக் கல்லூரி 4—0 கோல்களால் வெற்றியீட்டியது.

### பரி. யோவான் வெற்றி

யாழ். பரி. யோவான் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 1-ம் பிரிவில் பரி. யோவான் கல்லூரி 4—0 கோல்களால் வெற்றியீட்டியது.

2-ம் பிரிவில் இரு கல்லூரிகளும் தலா ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தைச் சமமாக முடித்தன.

3-ம் பிரிவில் பரி. யோவான் கல்லூரி 3—1 கோல்களால் வெற்றியீட்டியது.

### நெல்லியடி ம. ம. வி. வெற்றி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் நடந்த 1-வது பிரிவுப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 3—1 கோல்களால் வெற்றியீட்டியது.

## இன்று தேநீர்விருந்து

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் க.வீரகத்தியின் ஆசிரிய சேவையைக் கௌரவிக்கு முகமாக அவரது பழையமாணவர்கள நல்லூர் அரசவீதியிலுள்ள பண்டிதரின் இல்லத்தில் ஒரு தேநீர்விருந்தளிக்கின்றனர்.

(அ

## தென்மராட்சி ஞானஒளிக் கழகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி ஞானஒளிக் கழக வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. கே. நடராஜா தலைமையில் நடைபெற்றது. சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி ஆசிரியர் திரு தர்மலிங்கம் 'கலைவாணி மகிமை' என்னும் பொருள் பற்றி சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்தினர்.

வாரந்தோறும், சனி ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை வகுப்புகளை திரு. த. விபூதராஜாவும் சமய வகுப்புகளை திருமதி ம. அகிலாண்டேஸ்வரி ஆசிரியையும் பண்ணிசை வகுப்பை திரு. நவரத்தினம் ஆசிரியரும் இலவசமாக நடத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கழகத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. நடராஜா, உப தலைவர் ஆ. சிவகுமார், செயலாளர் த. விபூதராஜா, உப செயலாளர் இ. செல்வகுமார். பொருளாளர், ந. சிறீகாந்தன், உப-பொருளாளர் இ. குணராஜா, பத்திராதிபர் ந. ஜெயகாந்தன்.

மற்றும் 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

துப்பாக்கிக் கொள்ளை வழக்கு

# மேலும் 7 இளைஞர்கள் பிணையில் விடுதலை

## 9 பேருக்கு றிமாண்ட்

(கொடிகாமம்)

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை வழக்கில் ஏழு இளைஞர்கள் தலா ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர், ஒன்பது இளைஞர்கள் அடுத்த மாதம் பத்தாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று விசாரணை செய்யப்பட்டது. கடந்த தவணையின் போது 24 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டு 16 இளைஞர்கள் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர். இவர்களில் 7 பேரின் கைவிரல் அடையாளம் பதிவுசெய்யும்படி கட்டளைபிறப்பிக்கப்பட்டது.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி இரவு சாவகச்சேரி நீதிமன்றத்தை உடைத்து, அங்கிருந்த துப்பாக்கிகளை கொள்ளையடித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டவர்களில் சந்தேகநபர்களான இராசலிங்கம், இராசசுரேந்திரன், வி. நடராசா, கே. தெய்வேந்திரம், விமலநாதன். செல்வரத்தினம், தேவபாலன் ஆகிய ஏழுபேரும் நீதிமன்றத்தை உடைத்து, களவெடுத்தனர் என்ற பொலிஸாரின் குற்றச்சாட்டும், சந்தேகநபர்கள் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலமும் தவிர வேறு தனிச்சாட்சியம் எதுவும் இல்லாததினால், 1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட (15-வது இலக்க குற்றவியல் சட்டப்படி, இச்சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் செல்லுபடி அற்றது என்று எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வற்புறுத்தினர், இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி திரு ஐவன் பெரிணண்டோ, மேற்படி ஏழு சந்தேகநபர்களையும் தலா ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து சந்தேகநபர்கள் இரண்டுவாரங்களுக்கு ஒருதடவை ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சமுகமளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற பல்வேறு இடங்களில் தொழில் புரிவதால் இவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் சமுகமளிக்க நீதிபதி உத்தரவிடவேண்டும் என்று சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை நீதிபதி ஏற்றுக்கொண்டு அதன்படி தீர்ப்பளித்தார்.

ஏனைய சந்தேகநபர்களான கருணாநிதி, மரியதாஸ், சதானந்தம், இராசரத்தினம், சண்முகநாதன், மகேந்திரன். நவரத்தினராசா, தில்லையம்பலம், மகாலிங்கம் ஆகிய 9 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வாதாடியபோது, பொலிஸார் தரப்பில் ஆஜரான சார்ஜன்ட் கே. குகதாசன். சார்ஜன்ட் கே. கந்தசாமி ஆகியோர் பிணையில் செல்ல அனுமதிப்பதை எதிர்த்து. "தற்போதைய புதிய சட்டப்படி துப்பாக்கிகள் வைத்திருந்தால் பிணை அனுமதிக்கமுடியாது" என்று வாதாடினர். இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட சந்தேகநபர்கள் 9 பேரையும் அடுத்தமாதம் 10-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் திரு. குமார்பொன்னம்பலம், திரு. எஸ் கே மயில்வாகனம், திரு லோகேஸ்வரன், திரு கே பி வரதராசா, திரு ஆர் ஈ தம்பிரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்.

## கல்குடாவில் பிரதமருக்கு அன்பான வரவேற்பு

(கல்குடா)

இரண்டாந்தர பிரஜைகள் என்று எவரும் கிடையாது என பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்று கல்குடாவில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது கூறினார்.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்செய்துள்ள பிரதம மந்திரிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ராஜதுரை. நீதியமைச்சர் திரு தேவநாயகம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பிரதமமந்திரி அங்கு பேசுகையில் புதிய அரசமைப்பின்படி சகலருக்கும் சமஉரிமைகளும், சமஅந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது. அதனால் இரண்டாந்தரப்பிரஜைஎன்று எவரும் இருக்கமுடியாது என்றார்.

நாட்டின் நலன் கருதி சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## "மாணவருக்கு உழைக்கும் ஊக்கமளிப்பது ஆசிரியரே"

[தெல்லியடி]

"பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக, நாட்டின் வளர்ச்சிக்காக உழைக்கக் கூடியவர்களாக திகழத்தக்க முறையில் பயிற்றப்படவேண்டும். இப்புனிதகைங்கரியத்தை ஆசிரியர்களால்தான் செய்துமுடிக்கமுடியும்"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த தொழில் முன்னிலைப் பாடக்கைத்தொழில் பொருட்காட்சியையும் தீபாவளி மலிவு விற்பனையையும் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலைஅதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி தலைமையில் நடைபெற்ற ஆரம்ப உரையில் இராஜலிங்கம் எம். பி. தொடர்ந்து கூறியதாவது: கற்கும் பாடங்களினால் மட்டும் கல்வியின் நோக்கத்தை அடைந்துவிட முடியாது. எதிர்காலத்தில் தாம் சிறப்பாக] வாழக்கூடிய முறைகளையும் தொழில்களையும் கற்றுக்கொள்ளவேண்டும். கைத்தொழிலிலும் மற்றும் ஆற்றலுள்ள தொழில்களிலும் மாணவர்கள் தமது அறிவை பயன்படுத்தி வரவேண்டும்.

மாணவர்கள் தமதாற்றலை பெருக்கிக்கொள்ள பெற்றோர்களும் ஆசிரியர்களும் அரசாங்கமும் உதவியாக இருத்தல் அவசியமாகும். இங்ஙனமாக கிடைக்கப்பெறும் உதவிகளையும் மற்றும் வசதிகளையும் மாணவர்கள் பயன்படுத்தாதுவிடின் உதவிசெய்வோரின் உற்சாகம்கெட்டுவிடும் என்பதை மாணவர் உலகம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பாடசாலையிலுள்ள கட்டிடங்களின் விசாலம் என்பன பாடசாலையின் மதிப்பினை அளவிடும் கருவிகளல்ல. அப்பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்களின் வளர்ச்சியே உண்மை வளர்ச்சியாகும் என்றார்.

பாடசாலை உப அதிபர் திரு. கே. சிவசம்பு நன்றியுரை நிகழ்த்தினார். (உ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389. Registered Newspaper in Srilanka.

## யாழ்.நகரில் முப்பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தீபாவளி விருந்தாக யாழ். நகரில் இன்றிரவு முப்பெருவிழாவொன்று நடைபெறுகிறது. ஷர்மிலா ஆர்ட்ஸ் நிறுவனமும், வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவனமும் இணைந்து நடத்தும் இவ்விழாவில் 'இதயம் எனது காணிக்கை' என்ற திரைப்பட ஆரம்ப விழாவும், 'ஷர்மிலா' கலைஞர்கள் மாத இதழ் வெளியீடும், புதிய நாடக அரங்கேற்றமும் இடம்பெறும்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் கலாநிதி அ. சண்முகதாஸ், தொழிலதிபர் எஸ். தியாகராஜா, பல்கலைமணி தம்பிராசா உட்படப் பலர் உரையாற்றுவர். (அ)

## உதைபந்தாட்டம்: சென். ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி முதல்பிரிவில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் ஆட்டம் தொடங்கி முடிவடையும்வரை மிகவும் சிறப்பாக விளையாடினார்கள். இவர்கள் இடைவேளைக்கு முன்பாகவே 4-0 கோல்களால் முன்னணியில் நின்றார்கள்.

இடைவேளையின்பின், சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னணி வீரர்கள் கோல்கள் போட எடுத்த முயற்சிகளை சென், ஜோன்ஸ் கல்லூரியின் முன்னணி வீரர்கள் முறியடித்து விட்டனர், ஆட்டமுடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 4—0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. எஸ் எம். மார்ட்டின்மத்தியஸ்தம் வகித்தார்.

2-ம் பிரிவில், சென். பற்றிக்ஸ் கல்லூரி 1—0 கோல்களால் வெற்றி பெற்றது. 3-ம் பிரிவு ஆட்டம் எத்தரப்பினருக்கும் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது இப்போட்டிகளுக்கு முறையே திரு. ஏ. செபமாலை, திரு. ஏ. அன்ரனிப்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## அரசாங்க ஊழியரின் விடுமுறை: அமைச்சரவை ஆராய்கிறது

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் விடுமுறைகளைக் குறைப்பது பற்றி அமைச்சரவையின் உப குழுஒன்றுஆராய்ந்துவருகிறது என்று பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் டி. பி. ஐ பி சிறிவர்த்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இப்போது அரசாங்க ஊழியர்கள் விடுமுறையாகவும் லீவு நாட்களாகவும் வருடத்தில் 173 நாட்கள் ஓய்வெடுக்கிறார்கள். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் கூடிய ஓய்வுநாட்களாகும். ஓய்வுநாட்களை அதிகம் வழங்குவதாலேயே எமது நாடு அபிவிருத்தியில் பின்நிற்கிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல்பழிவாங்கலுக்குள்ளான அரசாங்க ஊழியர்கள் பற்றி விசாரித்துவந்த 4 குழுக்களில் 2 குழுக்கள் தமது சிபார்சுகளைத் தெரிவித்துள்ளனர். அக்குழுக்களின் சிபார்சுக்கேற்ப சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றன. (இ)

## ஒத்திவைப்பு

(புதுடில்லி)

சீனாவுக்கு விஜயம்செய்யவிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. அப்துல் பிகாரி வாஜ்பாயி தமது விஜயத்தை ஒத்திவைத்துள்ளார்.

## சுழிபுரத்தில் கருத்தரங்கு

(சுழிபுரம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சுழிபுரம் கிளை கருத்தரங்கு சுழிபுரம் கம்பளைக்கு அருகாமையாகவுள்ள சிற்றம்பலம் இராமச்சந்திரன் இல்லத்தில் இன்று பிற்பகல் நடைபெறும்.

திரு. எம். கே. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திருவாளர்கள் திரு. ரி. சங்கரப்பிள்ளை, குமார் பொன்னம்பலம், எம் கே சுப்பிரமணியம், ஆர் என் சிவப்பிரகாசம், சி முதலியார் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (க)

## டெஸ்ட்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சௌகான்-10, சுரேந்திர் அமர்நாத்-08, விஸ்வநாத்-20] பின்னர் ஆடிய வெங்கஸ்காரும் [76], மொகிந்தர் அமர்நாத்தும் [18] ஓட்டங்களின் எண்ணிக்கையை 154 வரை உயர்த்தினர், எனினும் 199 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளும் வீழ்ந்தன,

வேகப்பந்து வீச்சு வீரர்கள் இம்ரான்கான் [4-54], சர்வாஸ் நவாஸ் [4-46] இருவரும் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பாடிய பாகிஸ்தான் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து [முதர்சர் நஷார்] 28 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. [இ]

## காந்திசிலை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாசேதுங்கின் வாசகங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னரும் சேலத்திலுள்ள காந்திஜியின் உருவச்சிலையை சில விஷமிகள் உடைத்தது தெரிந்ததே. (இ)

## ஜே ஆருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன,

இந்திய ஜனதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டி, பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மற்றும் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்கள் திரு. ஜெயவர்த்தனவை விமான நிலையத்தில் வரவேற்றனர்,

திரு ஜெயவர்த்தன தம்பதிகளுக்கு பெருவாரியான மலர்மாலைகளும் சூட்டப்பட்டன.

விமான நிலையத்தில் பெருந் திரளான மக்களும் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் திரு. ஜெயவர்த்தனவை வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து ராஷ்டிரபதி பவன் வரை 12 மைல் தூரம் திரு ஜெயவர்த்தன மோட்டார் பவனியில் சென்றபோது வீதிகள் இருமருங்கிலும் ஏராளமான பொதுமக்கள் கூடிநின்று மகிழ்ச்சிபொங்க வரவேற்றனர்.

## காந்திஜி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாவின் குறிக்கோளும் கொள்கையுமாகும். எனவே எமது அயல்நாட்டின் சிறந்த தலைவர் ஒருவரை வரவேற்பதில் பெருமையடைகிறேன்

கலாச்சார பாரம்பரிய வரலாற்றுரீதியில் இருநாடுகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. திரு. ஜெயவர்த்தனவின் வரவால் இந்த உறவு மேலும் நெருக்கமடையும்.

தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு திரு. ஜே.ஆர். பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது:

இந்தியாவின் சிறந்த பாரம்பரியத்தை நான் நன்கு மதிக்கிறேன். இந்தியாவின் பெருந்தவப்புதல்வர் மகாத்மா காந்தியின் கொள்கைகளையே பின்பற்றிவருகிறேன்.

### இந்தியாவினாலேயே சுதந்திரதாகம் ஏற்பட்டது

அன்பு அஹிம்சை என்ற அடிப்படையில் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரப் போராட்டமே நாளடைவில் பிறர் தயவில் அடிமைப்பட்டிருந்த நாடுகளுக்கு சுதந்திரதாகத்தை ஏற்படுத்தியது. இதற்கெல்லாம் அந்நாடுகள் இந்தியாவுக்குநன்றிகூறவேண்டும்.

## பிரதமருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்றனர்,

### அம்பாறையில் புதிய உள்ளூராட்சிசபை

அம்பாறையில் விரைவில் உள்ளூராட்சிசபை நிறுவப்படும் என்று பிரதமர் திரு பிரேமதாசா அம்பாறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

இன, மத பேதமின்றி இலங்கையின் சகல பகுதிகளும் அபிவிருத்திசெய்யப்படும் என்றும் தெரிவித்த திரு பிரேமதாசா, வெளிநாட்டு உதவியின்றி நாம் வாழக்கூடிய யுகம் ஒன்றை ஆரம்பிப்பதே இன்றைய அரசின் நோக்கம் என்றும் கூறினார், (இ)